pricol

**PRICOL** LIMITED
*Passion to Excel*

109, Race Course,
Coimbatore 641018, India

+91 422 4336000
+91 422 4336299
city@pricol.co.in
pricol.com

CIN: L34200TZ2011PLC022194

CUSTOMERS EMPLOYEES SHAREHOLDERS SUPPLIERS

PL/SEC/TGT/2018-2019/232
Wednesday, 13th February, 2019

| | |
|---|---|
| The Manager<br>Listing Department<br>**National Stock Exchange of India Limited**<br>"Exchange Plaza', C-1, Block G<br>Bandra-Kurla Complex,<br>Bandra (E), Mumbai - 400051 | Corporate Relationship Department<br>**BSE Limited**<br>1st Floor, New Trading Ring<br>Rotunda Building, P J Towers,<br>Dalal Street, Fort, Mumbai 400 001 |
| Script Code: PRICOLLTD | Script Code: 540293 |

Dear Sir,

**Sub**: Press Release

Please find attached herewith the press release regarding "Workmen dismissal"

Kindly take the same on record and upload it on your respective websites.

Thanking you

Yours faithfully,
For Pricol limited

pricol limited

T.G.Thamizhanban
Company Secretary
ICSI M.No: F7897

Encl. As above

ISO14001
OHSAS18001
BUREAU VERITAS Certification

ISO/TS16949
BUREAU VERITAS Certification

**Pricol Limited, Coimbatore**
**Press Release (12-02-2019)**

Coimbatore District Pricol Workers' Union, an affiliated body of All India Central Council of Trade Union (AICCTU), has been functional in our Coimbatore plants since 2007. Ever since then, the members of the union have been involved in various unlawful activities thereby creating an unfavourable atmosphere for peaceful operations both inside and outside the organization.

Though the activities of the union have been always detrimental for the effective functioning of the plants, in order to protect the interests of the business and employee fraternity at large, Pricol management signed tri-party agreements on 08.06.2012 and 02.08.2014 and fulfilled the demands of the union from time to time to ensure a peaceful working environment.

This being the situation, the tri-party agreement dated 02.08.2014 came to an end on 30.06.2018 and discussions were on to formulate a new tri-party agreement with the unions from 29th March'18 onwards. However, from 21.08.2018, a section of the members of AICCTU union went on an indefinite strike. For our nature of business, Diwali season is one of the crucial times where the automobile manufacturers maximise their schedules between the months of August and November every year. AICCTU Union members timed the strike perfectly during this period with an obvious intent to block production thereby creating customer dissatisfaction as well as huge losses for the organization in terms of monetary value.

The strike was going on for more than hundred days and false allegations against the organization was wildly circulated in the social media by the members of the AICCTU union. Due to which, our major customers insisted that we transfer their existing orders strategically from Coimbatore plants to other plants located in different parts of the country to ensure continuous supply of products. This in turn affected the business at Coimbatore plants in a very big way.

Under these challenging circumstances and considering our social responsibilities to engage the workmen who went on this strike, we did our best to accommodate as many workmen as possible in our Coimbatore plants and the other workmen at our other plants outside of Coimbatore ( as per our contract of employment conditions). Since these businesses have been transferred based on the customer's request for business stability and long-term sustainability of the organization, the decision to transfer was made in the best interests, of all stakeholders more so to ensure the wellbeing of around 5000 families who are solely dependent on the wellbeing of Pricol. A few of the transferred employees have already commenced work in their transferred locations while the rest have not responded to any of our written appeals to them for the past 75 days. Therefore, we have no other option but to dismiss them from the services w.e.f 11th February 2019 as per their contract of employment conditions and statutory guidelines. However, we are ready to reconsider their dismissal order on humanitarian grounds if these workmen are willing to resume duty (with a written consent letter to the management) at their allotted location within 7 days from now.

\- Management

pricol limited

12.02.2019

# பிரிக்கால் லிமிடெட், கோவை
## பத்திரிக்கை செய்தி

கோவையில் உள்ள எங்களது தொழிற்சாலைகளில் CPI (ML) அரசியல் கட்சியைச் சார்ந்த AICCTU அமைப்பின்கீழ், "கோவை மாவட்ட பிரிக்கால் தொழிலாளர்கள் ஒற்றுமைச் சங்கம் (KMPTOS)" என்ற சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கம் துவங்கிய நாள் முதலே இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு எங்களது நிறுவனத்திலும், நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒரு அசாதாரண சூழ்நிலையை உருவாக்கி வந்தனர்.

இந்நிலையில், எவ்வித நியாயமான காரணமுமின்றி மேற்படி சங்கம் 21.08.2018 தேதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கி சுமார் 100 நாட்களுக்கும் மேலாக இந்த வேலை நிறுத்தத்தை நீட்டித்தது. மேலும், இந்த காலகட்டத்தில் நிறுவனத்திற்கு எதிரான பல பொய் பிரச்சாரங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டு எமது வாடிக்கையாளர்களிடையேயும், பொதுமக்களிடையேயும் எமது நிறுவனத்தின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்தினர். கோவையில் உள்ள எங்களது தொழிற்சாலைகளில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மேற்படி சங்கத்தினரால் இத்தகைய போராட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டதால், எமது வாடிக்கையாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை கோவை அல்லாத இதர தொழிற்சாலைகளில் இருந்து சப்ளை செய்ய வலியுறுத்தினர். இதனால் கோவை தொழிற்சாலைகளுக்கான ஆர்டர்கள் வெகுவாகக் குறைந்தது. இந்த சூழ்நிலையில், வேலை நிறுத்தத்தை முடித்துக் கொண்டு வந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் கோவையில் வேலை வாய்ப்பு வழங்க இயலாத சூழலிலும், கணிசமான தொழிலாளர்களுக்கு கோவையிலும், இதர தொழிலாளர்களுக்கு எமது இதர தொழிற்சாலைகளிலும் தற்காலிகமாக பணியிட மாறுதல் செய்து, ஒரு நாள்கூட ஊதிய இழப்பின்றி பணி வாய்ப்பு வழங்கப்பட்டது. தொழிலாளர்கள் பணியிட மாறுதல் செய்யப்பட்ட இடத்தில் சென்று பணிக்கு ஆஜராக ஏதுவாக கூடுதல் நிதி சுமையையும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. எங்களது நிறுவனம் தொழிலில் நீடித்து வியாபாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், தொழிலாளர்களுக்கு பணியிழப்பு ஏற்படுவதைத் தவிர்த்து அவர்களது பணியை உறுதி செய்யவும், இந்நிறுவனத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் சார்ந்துள்ள சுமார் 5,000 குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் நிர்வாகத்தின் இந்த முடிவு அத்தியாவசியமான ஒன்றாகும். மேலும், இந்த உத்தரவானது, அனைத்து தொழிலாளர்களது பணிநியமன உத்தரவிலும், தற்போது அமுலில் உள்ளதும், மேற்படி KMPTOS சங்கம் நிர்வாகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட முத்தரப்பு ஒப்பந்தத்திலும் தொழிலாளர்களை தொழிற்சாலைக்கு உள்ளேயும், வெளியேயும் பணியிட மாறுதல் செய்ய நிர்வாகத்திற்கு உள்ள உரிமை இருதரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், எங்களது நிறுவனம் தற்போது சந்தித்து வரும் கடுமையான சூழலை நன்கு புரிந்து கொள்ளாமலும், KMPTOS தொழிற்சங்கத்தின் தவறான வழிகாட்டுதலாலும், ஒரு சில தொழிலாளர்களைத் தவிர மற்ற தொழிலாளர்கள் நிர்வாகத்தின் தற்காலிக பணியிட மாறுதல் உத்தரவை ஏற்க மறுத்து வருகின்றனர். அத்துடன், நிர்வாகத்திற்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு பணிக்கு ஆஜராகாமல் நிறுவனத்திற்கு கூடுதல் இழப்பை ஏற்படுத்தி வருகின்றனர். சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அவர்களுக்கான பணியிடத்தில் சென்று பணிக்கு ஆஜராக நிர்வாகம் பலமுறை கடிதங்கள் அனுப்பியும் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

எனவே, வேறு வழியின்றி சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை சட்ட விதிகளுக்கு உட்பட்டு 11.02.2019 தேதி முதல் பணி நீக்கம் செய்து நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இருப்பினும், இந்த நிலையிலாவது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் தங்களது பணிநிலை கடமை பொறுப்புகளை உணர்ந்து தற்காலிகமாக பணியிட மாறுதல் செய்யப்பட்ட இடத்திற்குச் சென்று எவ்வித நிபந்தனையுமின்றி பணியில் சேர எழுத்து மூலமாக விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், நிர்வாகம் அதுகுறித்து உரிய முறையில் பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

pricol limited

நிர்வாகம்